முச்சந்தி முரளி




"இப்பிடி எல்லா ஆஸ்பத்திரியிலையும் சிக்கல் எண்டா சனம் என்னதான் செய்யிறது?"


Registered as a Newspaper

பக்கங்கள் - 12

விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 270

வியாழக்கிழமை
22 ஓகஸ்ட் 2024

ஆவணி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# மருத்துவ அலட்சியத்தால் எனது குழந்தை இறந்தது

## வவுனியா மருத்துவமனைக்கு எதிராக தந்தையொருவர் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஓக. 22

வவுனியா மருத்துவமனையில் பிரசவத்துக் காகச் சேர்க்கப்பட்ட தனது மனைவிக்கு, முறையான சிகிச்சை வழங்கப்படாததால், தனது குழந்தை உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்து, தந்தையொருவர் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் உயிரிழந்த 11



## குழந்தையின் பெற்றோருக்கு நீதி வழங்கப்படவேண்டும்!

### பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக. 22

பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், வவுனியா மருத்துவமனையில் மருத்துவரின் கவனயீனத்தினால் உயிரிழந்ததாகச் சொல்லப்படும், குழந்தைக்கு நீதி கோரி, மருத்துவமனைக்கு முன்பாக நேற்று பொதுமக் கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஊடகங்களுக் குத் தெரிவித்ததாவது:- 11

## காணி மோசடி; ஆண் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 22

கனடாவைச் சேர்ந்த பெண்ணொருவருக்குச் சொந்தமாக, 11

## கிளி. மருத்துவமனைக்கு 100 மில். ரூபா ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஓக. 22

கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனையில் காணப் படும் தேவைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய் யும் வகையில், 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக் 11

## வவு.வில் விபத்து; சாரதி காயம்

வவுனியா, ஓக. 22

வவுனியாவில் நேற்று இரவு இடம்பெற்ற விபத் தில், ஓட்டோ சாரதியொரு வர் படுகாயமடைந்துள் ளார்.

வவுனியா - விளக்கு வைத்தகுளம் ஏ-9 வீதி யில் ஹைஏஸ் வாகன மும், ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதி லேயே மேற்படி ஓட்டோ சாரதி படுகாயமடைந் தார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ-ம)

### சிலதரப்பினரிடம் இருந்து

## பவ்ரல் அமைப்பு கப்பம் பெற்றதா?

### ரொஷான் ரணசிங்க கேள்வி



கொழும்பு, ஓக. 22

நியாயமான முறையில் நடத்தப்பட வேண் டிய தேர்தலை ஊக்குவிக்கவேண்டிய பவ்ரல் அமைப்பு, ஒரு தரப்பினரிடம் இருந்து கப்பம் பெற்றுவிட்டதா? என்று எண்ணத்தோன்றுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில், 11

# ஐ.நா.வை எதிர்கொள்ள இலங்கை அரசு வியூகம்

### ஜனாதிபதி செயலகத்தில் இன்று கலந்துரையாடல்

**கொழும்பு, ஓகஸ்ட் 22**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் அடுத்தமாதம் நடைபெறவுள்ள நிலையில், இந்தக் கூட்டத் தொடரை எதிர்கொள்வது தொடர்பில், இலங்கை அரசாங்கம் இன்று சிறப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளது.** 11



### சஜித் தரப்பின்

## 'விக்கெட்' வீழ்ந்தது

### அத்துகோரள அவுட்



கொழும்பு, ஓக. 22

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட தலதா அத்துகோரள, பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தாலும் எனது அரசியல் 11

## 24ஆம் திகதிவரை வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், ஓக. 22

வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி மற் றும் காற்றுவேக மாறுபாடு காரண மாக வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்கள் உட்பட நாட்டின் பல பகுதி களுக்கும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை மழையுடனான கால 11

## யாழில் மினிசூறாவளி 11 பேருக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதன்கிழமை வீசிய மினி சூறாவளி காரணமாக மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர்.

மினி சூறாவளியால், குருநகர் - ஐந்துமாடிக் குடியிருப்புப் பகுதியிலுள்ள கட்டடத்தின் கூரைகள் தூக்கிவீசப்பட்டுள்ளன. 11

## கரவெட்டியில் நேற்றுக் கோர விபத்து: தாயும் இரு பிள்ளைகளும் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக. 22

கரவெட்டியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில், தாயும் இரண்டு பிள்ளைகளும் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு முன் பாக, பட்டா ரக வாகனமும், மோட்டார்சைக் கிளும் மோதியதிலேயே இந்த விபத்து சம் பவித்துள்ளது. மோட்டார்சைக்கிளில் பய ணித்த தாயும் அவருடைய இரு 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பர் ரணில் அல்லர் இந்தியாவே!

## மனோ கணேசன் முழக்கம்



**கொழும்பு, ஓக. 22**

**400 கோடி அமெரிக்க டொலர் தொடர் கடன் நிதியுதவியை இந்திய அரசு தந்ததால்தான், பெற்றோல், உணவு, எரிவாயு, மருந்து வரிசைகள், மின்வெட்டுகள், உரத் தட்டுபாடு ஆகியவற்றில் இருந்து எமது நாடு காப்பாற்றப்பட்டது.**

இந்த உண்மையை மறைத்து ரணில் விக்கிரமசிங்க நரித்தனமாக அரசியல் பேசி வருகிறார்.

-இவ்வாறு மாவனல்ல, ருவன்வெல்ல ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றிய போது தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு இந்திய அரசின் தொடர் கடன் நிதியுதவி வழங்க வேண்டும் என இந்திய அரசு, 2021 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம், கொள்கைரீதியாக முடிவு எடுத்தது. இவை ரணில் ஆட்சிக்கு வர முன்னர் தீர்மானிக்கப்பட்டவை. இந்த உதவிகள் இந்திய அரசு, இலங்கை மக்களுக்கு, இலங்கை நாட்டுக்கு வழங்கிய பெரும் உதவிகளாகும். ரணில் பதவிக்கு வந்து சுய முயற்சியால் இவற்றை கொண்டு வரவில்லை. இதுதான் உண்மை.

இந்திய தேசம்தான், எமது நாட்டை காப்பாற்றியது என்ற அடிப்படை உண்மையை மறைத்து தான் ஏதோ நாட்டைக் காப்பாற்றியது தனது சாதனைகள் என ரணில் வழமை போல் நரித்தனமாகக் கூறிவருகிறார்- என்றார். (ச)

# அரகலய போராட்டம் ரணிலும் சூத்திரதாரி

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

அரகலயப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரகலயவில் ஈடுபட்ட ஒரு பிரிவினர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்புபட்டிருக்கிறார்கள். அவரது செயற்பாடுகளைப் பார்க்கும்போது, அவரும் அரகலயப் போராட்டத்தின் சூத்திர தாரிகளில் ஒருவர் எனவே நிரூபணமாகிறது. 'சிஸ்டம் ச்சேஞ்' என்ற முறைமை மாற்றத்தைக் கோரி போராடிய இளைஞர்கள் இன்னும் வீதிகளிலேயே இருக்கிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்காகச் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமிடல்கள் எம்மிடம் உள்ளன என்றும் அவர் மேலும்குறிப்பிட்டார். (ச-இ)

# வாக்குறுதி மழை இனிக் கட்டுப்பாடு

## பவ்ரல் முன்னெடுப்பு

கொழும்பு, ஓக. 22

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி வேட்பாளர்கள் நடைமுறைப்படுத்துவதற்கான காலக்கெடுவை முன்வைக்குமாறு பவ்ரல் அமைப்புவிசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்துள் ளது.

கடந்த காலங்களிலும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டனர். ஆனால் அவர்களின் வாக்குறுதிகளுக்கும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி காணப்பட்டது. அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த விடயங்கள் யதார்த்த சூழ்நிலையுடன் ஒத்துப்போகாததாகக் காணப்பட்டமையே இதற்கான காரணம். அவர்கள் சந்தேகமற்ற முறையில் வாக்காளர்களை கவர்வதற்காகவே வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

அந்தவகையில் அரசியலை சுத்தம் செய்யும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேட்பாளர்கள் தங்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான காலஎல்லையை முன்வைக்கும் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய தேர்தல் விஞ்ஞாபனத்துடன் செயற்திட்டமொன்றையும் பவ்ரல் கோரவுள்ளது. ஒவ்வொரு வேட்பாளருக்கும் தங்கள் சொந்தக் கொள்கைகளை திட்டங்களை கொண்டிருப்பதற்கான உரிமையுள்ளது.

ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை அவர்கள் மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# விலகிச்சென்றோருக்கு கதவு திறந்தேயுள்ளது

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து சென்று ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளித்தவர்கள் தொடர்பில் எமக்கு மனக்கசப்பு எதுவும் இல்லை. விலகிச் சென்றவர்களுக்காக கட்சியின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் -இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களுக்காக கட்சியின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். யாராக் இருந்தாலும் எந்த நேரத்திலும் கட்சியிலிருந்து வெளியேறமுடியும். எப்போது வேண்டும் என்றாலும் மீண்டும் கட்சியில் இணைந்துகொள்ள முடியும்.

இந்த நாடு பொருளாதார, சமூக ரீதியாக விருத்தியடைந்திருந்த காலப்பகுதி என்றால் அது மஹிந்த ராஜபக்சவின் யுகமாகும். எனவே, மஹிந்த ராஜபக்ச இடையில் விட்டுச் சென்ற இடத்திலிருந்து முன்னோக்கிக் கொண்டு செல்வதே எனது பிரதான பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# நாமலுக்கு 5ஆம் இடமே

## எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22

ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவால் ஐந்தாவது இடத்தையே பிடிக்கக்கூடியதாக இருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவுக்கு நல்ல மரியாதை இருந்தது. அவர் 30 வருடகால போரை முடித்த தலைவர். ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக்கட்சி போட்டியிடக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அவர் இருந்தார்.

எனினும், தனது மகன் தேர்தலில் போட்டியிடுவதால் மஹிந்தவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நாமலுக்காக களமிறங்கியுள்ளார். எனினும், நாமலால் ஐந்தாவது இடத்துக்கு தெரிவாக முடியும். அதுகூட சந்தேகமே என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# நிறைவேற்றதிகாரம் நீக்கப்படக்கூடாது!

## பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படக்கூடாது.

ஊழல் அரசியல் கலாசாரத்திலிருந்து விடுபட புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டு நாட்டை தேசியத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

-இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஊழல் அரசியல் கலாசாரத்தின் விளைவுகளால் நாடு சூழப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ள திருடர்களை அகற்றி ஊழல் நிறுவனங்களைச் சுத்தப்படுத்தவேண்டும்.

ஒரே குழுக்கள் வெவ்வேறு அரசியல் கட்சிகளை உருவாக்கி மக்களிடம் வந்தாலும் அவர்களின் மனநிலை மாறவில்லை. அவர்கள் நாட்டைப் பற்றியோ நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியோ சிந்திப்பதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தெளிவற்ற வாக்குறுதிகளால் மக்களைக் குழப்ப வேண்டாம்

## அலிசப்ரி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 22

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கவிரும்பும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அதனை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றனர் என்ற திட்டத்தை முன்வைக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.


அவர்மேலும்தெரிவிக்கையில், தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால் வாக்காளர்களை குழப்ப வேண்டாம். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவது தொடர்பில் வாக்குறுதிகளும் முன்வைக்கப்படுகின்றன. இது கடந்த காலங்களில் வழங்கப்பட்ட ஆனால் ஒரு போதும் நிறைவேற்றப்படாத வாக்குறுதி.

சர்வஜனவாக்கெடுப்பு இல்லாமல் இந்த மாற்றத்தை மேற்கொள்ளமுடியாது என உயர் நீதிமன்றம் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

ஆகவே செயல்முறை பற்றிய தெளிவான விடயங்கள் அவசியம்.

தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால் வாக்காளர்களைக் குழப்ப வேண்டாம்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருவிழாவின் 12 ஆம் நாள் மாலை உற்சவத்தை முன்னிட்டு ஏறுமயிலேறி பச்சைப் பட்டுடுத்தி எழுந்தருளிய நல்லூரான் பக்தர்கள் புடைசூழ வெளிவீதி உலா வந்து அருள்பாலித்தார். (ச-25,100)

# நல்லூர்த்திருவிழாவின் 14ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.22

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி அலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

14 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சைவாகம பூஷணம்சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் ஜப்பான் கச்சுவின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் முனைவர் திருமதி ச. மனோன்மணி, சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப் பீட இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் மற்றும் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் கோபாலு பத்மநாதன் ஆகியோரும்கலந்துசிறப்பிக்கவுள்ளார்கள்.

ஸ்ரீ கற்பக செந்தில் கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை, அத்தியடி சிதம்பர நடராஜர் வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, ஆதி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விசேட நிகழ்வாக கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் பல்லியம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ச-45)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் வடமராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான கணக்கீடு பாடத்துக்கான இலவசக் கருத்தரங்கு கரவெட்டியில் அமைந்துள்ள கல்லூரியின் சிவபாத சுந்தரம் கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ரி-66)

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.22

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

மூளாய் பதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ச-45)



## நல்லூரான் சிறப்பம்சம்

நல்லூர்க்கொடி யேற்றமென்றால்
நாலூரும் விழிப்படைந்து
சொல்லாலும் செயலாலும் கிளியே
தூய்மையாய் வாழ்ந்திடுமே.

ஒருபோது உணவருந்தி
ஒழுங்காகக் கோயில்சென்று
தருமங்கள் செய்திடுவார் கிளியே
சைவமாய் வாழ்ந்திடுவார்.

கந்தனைக் கண்டிடலாம்
களிகொண்டு நின்றிடலாம்
வந்தனை செய்திடலாம் கிளியே
வாராயோ நல்லூருக்கு.

காதலிற் சிறந்திடலாம்
கைபிடித்து வாழ்ந்திடலாம்
சாதலிற் தவிர்ந்திடலாம் கிளியே
தயங்காம லோடிவாடி.

பேரினைக் கேட்டிடலாம்
பித்தேற்றிக் கொண்டிடலாம்
வேரிக் கடம்பனடி கிளியே
வேட்கையும் தணிந்திடலாம்.

சிந்தனை செய்திடலாம்
சிவசிவ என்றிடலாம்
பந்தனை யகற்றிடலாம் கிளியே
பாங்காக வருவாயோடி

ஆராரி ருந்தென்ன
ஆறுமுகன் தஞ்சமன்றி
வேறார்தான் துணையாவார் கிளியே
விண்ணாணம் பேசாதேடி.

பார்த்தாலே பசிதீரும்
பாலசண் முகன்வடிவை
வேர்த்தாவி மயங்குமுன்னர் கிளியே
விரைந்து நீ நடந்துவாடி.

நீராடி நீறணிந்து
நெற்றியிற் பொட்டுமிட்டு
மாறாட்டக் காரரைப்போல் கிளியே
மனிதரெல்லாம் போறாரெடி.

ஆறுமுக சுவாமிவாசல்
ஆறுதல் அளிக்கும் வாசல்
கூறுமடியார்க ளெல்லாம் கிளியே
கூட்டமாய்க் கூடுகிறார்.

மணியோசை கேட்டவுடன்
மனத்தினை ஒடுக்கிக்கொண்டு
அணியணி யாகநின்று கிளியே
ஆரத்தி பார்த்திடுவர்.

வீதிவலம் வந்திடுவார்
வேலனைக் கொண்டாடிடுவார்
சோதிமய மாக்கிடுவார் கிளியே
சுற்றுப் புறங்களெல்லாம்.

வலமாக வந்திடுவார்
வாயார வாழ்த்திடுவார்
இலமென்று இரந்திடுவார் கிளியே
எங்கெங்கும் கூட்டமடி.

அப்பனே முருகாவென்பார்
அழுது தொழுது நிற்பார்
செப்பித் திரிந்திடுவார் கிளியே
செவ்வேளின் நாமமெல்லாம்.

காணிக்கை போட்டிடுவார்
கர்ப்பூரம் எரித்திடுவார்
கோணிய பிறைமுடியான் கிளியே
குமரனைக் கும்பிடுவார்.

காவடியெ டுப்பவரும்
காலடிய ழிப்பவரும்
சேவடி துதிப்பவரும் கிளியே
சேர்ந்தொன்றாய்ச் செல்வரடி.

பண்டிதரும் பாமரரும்
பத்தியுடன் பாடியாடி
அண்டர்தொழும் நாயகனைக் கிளியே
ஆர்வமுடன் ஏத்துகின்றார்.

காவடி ஆடுவாரும்
களிகொண்டு பாடுவாரும்
சேவடி ஏத்துவாரும் கிளியே
தெய்வங்கள் போன்றிடுவார்

பால்பழத் துடனேவந்து
பணிந்து அர்ச்சனைகள்செய்து
நால்வகைப் பேறுகளில் கிளியே
நயந்தவற்றைப் பெறுகிறாரே.

தாய்தந்தை மக்கள்தம்மை
தஞ்சமென் றொப்படைத்து
சேயோன்றன் திருவடியைக் கிளியே
சேவித்து நிற்பாரடி.

ஈராறு கையோனை
எழிலாரும் சேயோனை
ஆராத காதலுடன் கிளியே
அடியார்கள் அழைத்திடுவார்.

காலையிலும் மாலையிலும்
கைகூப்பி வணக்கஞ்செய்து
மூலைக்கு மூலைநின்று கிளியே
முருகனருள் வேண்டிடுவார்.

எல்லோரும் சேர்ந்தொன்றாய்
எழுப்புகின்ற ஏத்தொலிபோய்
எல்லூரும் வானத்திலே கிளியே
எழுகடல்போல் இசைத்திடுமே.

அரோகரா வென்றடியார்
அழைக்கின்ற ஓசைசென்று
பராபரன் செவிகளிலே கிளியே
பணிவாகக் கேட்டிடுமே.

நல்லைநகர் வாசஞ்செய்வோன்
நற்றவத்தோர் தங்கள் நேசன்
தொல்லையெல்லாம் போக்கிடுவான் கிளியே
தூய்மையுடன் தொழுதிடுவாய்

எல்லையில்லா அருளுடையான்
எல்லார்க்கு மெளியானவன்
வல்லசுரர் வலியையெல்லாம் கிளியே
வாட்டியருள் செய்திடுவான்.

விரதங்கள் பிடிப்பவரும்
வேதங்கள் படிப்பவரும்
சிரவணஞ் செய்பவரும் கிளியே
திரண்டொன்றாய்க் கூடிடுவார்.

பாரெல்லாம் கூடிநின்று
பக்தியுடன் பரவிடுவார்
தேர்விழாக் கண்டிடுவார் கிளியே
திருவருளும் பெற்றிடுவார்.

நல்லூரிற் றேரிலன்று
நானில மக்களெல்லாம்
நல்லாக நோற்றிருந்து கிளியே
நல்வரம் பெற்றிடுவார்.

ஆராலும் அளந்தறியா
ஆறுமுகன் அருளையெல்லாம்
சீராகச் செப்பவென்றால் கிளியே
சிறியோர்க்கு மாகுமோடி.

ஒளிவீசும் வேலதனை
ஒண்டொடியே உள்ளேகண்டால்
வெளியிலுள்ள வீணரெல்லாம் கிளியே
விட்டோடி மறைந்திடுவார்.

ஈழநாடு வாழவந்த
எங்கள் குருநாதன்
நீள நினைக்கவைத்தான் கிளியே
நிகரில்லா நல்லூரானை.

சிவசிந்தனை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ். குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் திறப்பு விழா பாடசாலை அதிபர் சி.சிவகுமாரன் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடாவைச் சேர்ந்த பொறியியலாளர் சோ.கணாதீபன், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 66)

## பொன்விழாக் காணும் யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடமும் தமிழ்த்துறையும் இணைந்து நடத்தும் பொன்விழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பொன்விழாவில் 'தென்னிந்தியா யாழ்ப்பாணம் கல்வி கலாசார ஊடாட்டம்' எனும் தலைப்பில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப் பேருரையும், யாழ். பல்கலைக்கழக தமிழியல் நூலகத்தின் 'வித்தியானந்தன் நூலக முகிழ்ப்பின் வரலாறு' எனும் ஆவணப்பட காட்சிப்படுத்தலும், சத்தியவான் சாவித்திரி எனும் இசைநாடக மேடையேற்றமும் இடம்பெறவுள்ளன. (ரி)

## பொன்சுகந்தன் பொன்விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஓக. 22

பொன்.சுகந்தனின் இரசிகர் வட்டம் நடத்தும் பொன். சுகந்தனின் பொன்விழாவும் பொன்சுகந்தனின் வரலாறு நூல் வெளியீடும் எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட முன்னாள் செயலர் உடுவை எஸ்.தில்லைநடராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விடயமாக முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். கேட்டதை வாங்கித் தருவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். வீண் அலைச்சல் ஏற்படும். உடல் அசதி உண்டாகவும் கூடும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக் கூடும். செலவுகள் ஏற்படும். பணம் கிடைப்பது தாமதமாகும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும். சிரமங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தில் மூத்த உறுப்பினர்களிடம் பேசும்போது பதற்றம் தவிர்க்கவும். அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். நீங்கள் தொடங்கும் காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

## இலவச யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.22

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இளைஞர்களுக்கான இலவச யோகக்கலை சான்றிதழ் பயிற்சிநெறி பிரிவு - 3 ஆரம்பம் யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணி வரை இடம்பெறவுள்ளது. விண்ணப்பப்படிவ பதிவை மேற்கொள்ளாதவர்கள் பயிற்சி நடைபெறும் இடத்துக்கு வந்து விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து வளவாளரிடம் தமது பதிவினை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சியில் இணைந்து கொள்பவர்கள் தளர்ச்சியான ஆடை அணிந்து வருவதுடன், யோகக்கலை பயிற்சிக்கான விரிப்பினையும், படுக்கை விரிப்பினையும் எடுத்து வருமாறு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார். (ஒ-ரி)



## குத்துச்சண்டைப் போட்டி மடு வலய மாணவன் கபிலன் முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக.22

வடக்கு மாகாண பாடசாலை ரீதியாக 20 வயதுப் பிரிவு குத்துச்சண்டைப் போட்டியில் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மாணவன் வி.கபிலன் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் இந்தப் போட்டி இடம்பெற்றது. (ரி-56)



உரும்பிராய் கிழக்கு அருள்மிகு மனோன்மணி அம்பாள் சமேத சிவமகேஸ்வரர் ஆலய வருடாந்த கொடியேற்றம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ரி)



கோண்டாவில் மேற்கு கந்தர்வளவில் தான் தோன்றித் தாயவளான காளி குடியிருக்கும் ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோவிலில் கடந்த திங்கட்கிழமை தீ மிதிப்பு நிகழ்வு நடைபெற்றது. பன்னெடுங் காலமாக கோவிலின் தீர்த்த உற்சவத்தின் போது, தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-45)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 22

'சிறுபொறி' இதழின் ஓராண்டு விழா சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதன்போது சிறுபொறியின் 5 ஆவது இதழ் வெளியீடு, பரிசளிப்பும் கௌரவிப்பும், கலை நிகழ்வுகள், மாவை நித்தியானந்தனின் எழுத்துருவிலான சண் நாடகக் குழுவினர் வழங்கும் 'முட்டை' எனும் நாடக அரங்கேற்றம், ஓவியக் கண்காட்சி போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் அதிதிகளாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், சங்கானை வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ.பிரணவநாதன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெருகட்டும் தத்தெடுப்பு!

சிறுவர்கள் மற்றும் குழந்தைகளைத் தத்தெடுக்கும் விவகாரத்தில் ஆசியாவுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகுக்குமே பாடமெடுக்கும் வகையில், மிகப்பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்காட்டியிருக்கின்றது இந்தியா. இதன்படி, 35 தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்ட திருமணமான, திருமணமாகாத எவரொருவரும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களைத் தத்தெடுக்கும் வகையில் அங்கு சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

40 வயதுக்கும் மேற்பட்ட திருமணமான குழந்தைகளைப் பிரசவிப்பதற்கு உடலியல் ரீதியிலான குறைபாடுகள் உள்ளவர்கள் என மருத்துவத்துறையால் எண்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே, குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ள உலகளவில் பரவலாக அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த முறைமையில் மாற்றங்களைச் செய்து, குழந்தைகளைத் தத்தெடுப்பதில் தளர்வுப் போக்குகளை உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று தொண்டு நிறுவனங்கள் பலவும் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் பின்னணியிலேயே, தத்தெடுப்புச் சட்டங்களில் தளர்வைக்காட்டியிருக்கின்றது இந்தியா.

திருமணமாகாத ஒருவர் குழந்தையொன்றைத் தத்தெடுக்கும் பட்சத்தில், அது அந்தக் குழந்தைக்குப் பல்வேறுபட்ட நெருக்குவாரங்களை ஏற்படுத்த சாத்தியம் உண்டு. காலப்போக்கில், அது சமூகப் பிறழ்வுகளுக்கும் வழிவகுக்கும் என்பதால்தான் குழந்தைகளைத் தத்தெடுக்கும் விடயத்தில் உலகநாடுகள் அதிகவனத்தைப் பின்பற்றுகின்றன. இதிலிருக்கும் நியாயத்தனங்களை மறுப்பதற்கில்லை. ஆதலால், இவ்வாறு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக, சில திட்டங்களையும் இந்தியா ஏற்படுத்தத் தவறவில்லை. இதன்படி, திருமணமாகாத ஆணொருவர் ஆண் குழந்தையை மட்டுமே தத்தெடுக்க முடியும் என்றும், திருமணமாகாத பெண்ணொருவரே ஆண், பெண் என இருபால் குழந்தைகளையும் தத்தெடுத்துக்கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் எடுத்த எடுப்பில் குழந்தைகள் அவர்களுடன் அனுப்பிவைக்கப்படமாட்டார்கள். மாறாக, இரண்டு வருடங்கள் சிறுவர் இல்லங்களில் வைத்து அந்தக் குழந்தைகளுடன் அவர்கள் (தத்தெடுப்பவர்கள்) நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கவேண்டும். தத்தெடுப்பாளரால் குழந்தையை சிறந்த முறையில் வளர்க்கவும் - பராமரிக்கவும் முடியும் என்று திருப்தியுறும் பட்சத்திலேயே குழந்தைகள் அவர்களுடன் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றெல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை உட்பட, உலகளவில் இன்று சிறுவர் இல்லங்களினதும், முதியோர் இல்லங்களினதும் தேவைகள் அதிகரித்தே வருகின்றன. குழந்தைகளைப் பிரசவிக்க உடலியல் பிரச்சினைகள் உள்ளவர்கள் தங்களின் முதுமைக்காலத்தில் முதியோர் இல்லங்களுக்குள் அடைபட்டுப்போகும் அபத்தமும், சிறுவர் இல்லங்களில் குடும்ப வாழ்வொன்றை குழந்தைகளும், சிறுவர்களும் இழந்து பரிதவிக்கும் இன்னலும் நீங்கப்பெறவேண்டுமாயின், தத்தெடுப்புச் சட்டங்களில் தளர்வுப் போக்குகள் கடைப்பிடிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததே. இதன்மூலம் சிறுவர்களுக்கு ஒரு குடும்ப வாழ்வு அமைவதுடன், அந்தச் சிறுவர்கள் தம் 'பெற்றோரை' பராமரிப்பதன் மூலம் முதியோர் இல்லங்களின் தேவையும் குறைக்கப்படும்.

குடும்பக் கட்டமைப்பை வளப்படுத்தவும், பரவலாக்கவும் இந்தியா காட்டியிருக்கும் இந்தப் பாதை உலக நாடுகள் முழுவதும் நீட்சியுறவேண்டும். 'ஆதரவு அற்ற நிலை' என்பதைவிடவும் வேறொரு துன்பமென்று உலகில் ஒன்றுமில்லை. ஆதலால், அவ்வாறான பேரபத்தத்தை இல்லாதொழிப்பது, அரசினதும் சிவில் சமூகத்தினதும் தலையாக கடமையன்றோ!




# வேட்பாளர்கள் வாக்குறுதி நாணயநிதியம் கவனிப்பு

**கொழும்பு, ஓக. 22**

**இலங்கை அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் மேடைகளில் வெளியிட்ட அறிக்கைகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்தியுள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் தலைமையில், இலங்கைக்கு வந்துள்ள கண்காணிப்புக் குழு இந்த அறிக்கைகளை ஆராய்ந்து வருகிறது.

கடந்த 19 ஆம் திகதி கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த இந்தக் கண்காணிப்புக் குழு, இந்த வாரத்துக்குள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## விவாதத்தை ஏற்றார் திலித்

கொழும்பு, ஓக. 22

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 6 வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதத்தில் பங்கேற்க விடுக்கப்பட்ட அழைப்பை உத்தியோகபூர்வமாக ஏற்பதாக ஜனாதிபதிவேட்பாளர் திலித் ஜயவீர அறிவித்துள்ளார்.

பவ்ரல் அமைப்புக்கு எழுத்து மூலம் இதனைத் தெரிவித்தார்.

கொள்கைகள் பற்றிய ஆக்கபூர்வமான உரையாடலைக் காண இலங்கையர்களுக்கு இந்தத் தளம் ஒரு புதுமையான அனுபவத்தை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## 119 பில்லியன் ரூபா மின்சாரசபை ஈட்டல்

கொழும்பு, ஓக. 22

இந்த வருடத்தின் முதல் அரையாண்டில் 119.20 பில்லியன் ரூபா (11,920 கோடி) இலாபத்தை ஈட்டியுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பெற்ற 20.65 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 34.53 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இது 67.2 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்று மின்சாரசபையின் நிதி அறிக்கைகள் தெரிவித்துள்ளன. (ச)

## விபத்துகளால் 1,417 பேர் பலி!

கொழும்பு, ஓக. 22

இந்த வருடத்தில் இதுவரை 1,417 பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வருடாந்தம் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் நடக்கின்றன. அதில் மூன்றில் ஒன்று மோட்டார்சைக்கிள் விபத்து என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இழப்பீடு

சேதமடைந்த பயிர்களுக்கான நட்டஈடாக ஏக்கருக்கு ஒரு இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள் ளது. அதனடிப்படையில், வறட்சி, வெள்ளம் மற்றும் வன விலங்குகளால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

23.08.2024

வெள்ளிக்கிழமை - ஆவணி - 07

சுபநேரம் : 06.05 - 07.35

ராகுகாலம் : 10.35 - 12.05

## நாளொரு நல்வார்த்தை

**சமாதானமே சிறந்த மற்றும் மலிவான வழக்கறிஞர்.**

*- லூயிஸ் ஸ்டீவன்சன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கு பிரதேச சபை,நெடுங்கேணி
## கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கடையை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | கடை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல 1 | 2,000.00 | 10,000.00 | 80,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 2024.08.23 – 2024.09.06 பிற்பகல் 1.30 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2024.09.06 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் 2024.09.06 பிற்பகல் 02.05 மணி

கேள்வி நிபந்தனைகள்

1. **கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.**
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதி என்பனவற்றை தனித்தனி உறைகளில் இட்டு **"செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் **2024.09.06** ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் **"தவறுனராகக்"** கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் **தவறுனராக** அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. **தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.**
6. **கடைக்கான மாதவாடகையாக 4500.00 ரூபாவும் செலுத்தப்படல் வேண்டும். எனினும் வாடகைத் தொகை காலத்துக்குக் காலம் பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்படும்.**
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
11. **குறித்த கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஒட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, நாவிதன் கடை, சலவைத்தொழில் போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.**

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200, மற்றும் 0242053014 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்

செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

CR/42958 J-1

# இஸ்ரேலால் தொடர்ந்தும் போர்க்குற்றங்கள்

ம. உ. கண்காணிப்பகம் சாடல்



டெல்அவிவ், ஒக. 22

இஸ்ரேல் அரசாங்கம் தொடர்ச்சியாகப் போர்க் குற்றத்தில் ஈடுபட்டு வருகின்றது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

காஸாவில் கடந்த 11 மாதங்களாக மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளின்போது இஸ்ரேல் பல தடவைகள் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக இதற்கு முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. ஆனால், இம்முறை காஸாவுக்கு வெளியில் நடத்தப்பட்ட தாக்குதல்களை மையமாக வைத்தே இஸ்ரேல் மீது போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதன்படி, இஸ்ரேலால் யேமனின் ஹோடியாத் துறைமுகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலும், தாக்குதல் நடத்தப்பட்ட விதமும், தாக்குதலில் இலக்கானோரும் இஸ்ரேலின் போர்க்குற்றத்தை வெளிப்படுத்துவதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. லெபனானுக்குள் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதல் என்ற பெயரில், இஸ்ரேல் போர்க் குற்றங்களிலேயே ஈடுபட்டு வருகின்றது என்று மேலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் சர்வதேச போரியல் நியமங்களுக்கு அப்பாற்பட்டும், மனித உரிமைகளுக்குப் புறம்பான வகையிலும் தீவிரமாகவும் மூர்க்கமாகவும் செயற்படுகின்றது என்று இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்காவால் வழக்குத் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட யன்னல்கள், வெற்றுத்தார்பரல்கள், கதவுகள், தறித்த மரங்கள், ஓடுகள், மின்விசிறிகள் போன்ற பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காலம் : **06.09.2024, வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி**
இடம் : **தலைமை அலுவலகம், புத்தூர்**

நிபந்தனைகள்

1. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினையும், அதன் விபரத்தினையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
2. ஏலதாரராக கலந்து கொள்பவர் மீளளிக்கக்கூடிய வைப்பு பணமாக ரூபா. 5,000.00 இனைச் செலுத்தி ஏல விற்பனையில் பங்குபற்றலாம்.
3. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத்தொகையினையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

021- 2058986

செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.08.22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மருத்துவமனைகளிலும் முறைப்பாட்டு தொடர்பிலக்கங்கள்!

## காட்சிப்படுத்த வேண்டுமென வடக்கு ஆளுநர் பணிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 22**
**வடக்கு மாகாணத்தில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் தாமதம் அல்லது சிக்கல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை அளிப்பதற்கு அனைத்து மருத்துவமனைகள், அரச மருந்தகங்கள் ஆகியவற்றில் முறைப்பாடுகளுக்கான தொடர்பிலக்கங்கள் அடங்கிய பதாகைகள் காட்சிப்படுத்தவேண்டும்.**

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மாகாண சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில் உள்ளதாவது:-

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், மருத்துவர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்பு கொள்ளவேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன பதாகையில் காட்சிப்படுத்தப்படவேண்டும்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாகையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும். பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்துடன் ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் 'அபயம்' பிரிவின் தொலைபேசி இலக்கமும் அறிவித்தல் பதாகையில் காட்சிப் படுத்தப்படவேண்டும்.

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு, அவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்த சுகாதாரத் துறையினர் மேலும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் - என்றார். (ச-26,27,66)


# முகமாலையில் வழிப்பறி

யாழ்ப்பாணம், ஓக. 22

வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை நிறுத்தி திருட்டு நோக்கில் அச்சுறுத்தியவர்கள் அவரிடம் எதுவும் கிடைக்காத நிலையில் மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ -9 வீதியில் பயணித்த வேளையில் நடந்துள்ளதாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் முகமாலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (ச-9)



# நீளமான முத்திரை

கொழும்பு, ஓக. 22

உலகிலேயே மிகநீளமான தபால் முத்திரை இலங்கையில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

கண்டி பெரஹெராவைக்குறிக்கும் முகமாக இந்த முத்திரை வெளியிடப்பட்டுள்ளது. இந்த முத்திரையின் நீளம் 205 மி.மீ ஆகும்.

முதலாவது முத்திரையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டார். (ஒ-6)



# மனுஷவுக்குப் பதிலாக பந்துலால் பிரமாணம்

கொழும்பு, ஓக. 22

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பந்துலால் பண்டாரிகொட நாடாளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

நேற்றுக் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அந்தக் கட்சியின் உறுப்புரிமை நீக்கப்பட்டமை காரணமாக பதவி இழந்த மனுஷ நாணயக்காரவின் வெற்றிடத்துக்கே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-44)

# ஹெரோய்னுடன் பொலிஸ் கைது

கொழும்பு, ஓக. 22

ஒரு கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மொரட்டுவை விசேட அதிரடிப்படையின் [illegible] சேர்ந்தவர்கள் [illegible] கப்படுகிறது. (ச-இ)




பழையன கழிதலும் புதியன புகுலும் புதிசில்லை. ஆனால் புதிசா ஒரு இடத்துக்கோ பதவிக்கோ வந்திட்டம் எண்டால் பழசை மறந்திட்டு. அதுக்கு தலைகீழாநடக்கிறதுதான்பிழை. இப்பகொஞ்சக்காலமா உந்த ஐ.எஸ்.ஏ. மாரைப் பற்றி பட்சிக்கு ஒரே முறைப்பாடு. ஐ.எஸ்.ஏ. எண்டவுடன உந்த ஐ.எஸ். தீவிரவாதியளைப் பற்றித்தான் முறைப்பாடு எண்டு நீங்கள் பிழையா நினைக்கக்கூடும். ஆனால் இந்த ஐ.எஸ்.ஏ. மார் ஆரெண்டால் ஆசிரிய ஆலோசகர்கள். அவையில சிலர் தாங்கள் ஐ.எஸ்.ஏ.மார் எண்டதை மறந்து ஐ.எஸ். தீவிரவாதியள் எண்ட நினைப்பில இருக்கினம் எண்டு பள்ளிக்கூட ரீச்சர்மார் புலம்பித்தள்ளுகினம். இந்த ஐ.எஸ்.ஏ.மார் முதலில பள்ளிக்கூட ரீச்சரா இருந்துதான் படிப்படியா ஐ.எஸ்.ஏ. எண்டு புரொமோசன் கிடைக்கிறது. இப்பிடி ஐ.எஸ்.ஏ.யா வாறவையில கனபேருக்கு அதிர்ஷ்டம் அடிக்கும், சிலருக்கு புரொமோசனே ஆப்பாவும் மாறிப்போடும்.

அதுக்குக் காரணம் என்னெண்டால் ஒருத்தர் எந்த வலயத்தில, என்ன பாடத்துக்கு ஐ.எஸ்.ஏ.யா வாறாரோ அதுக்குப் பிறகு பென்சன் எடுக்கும் வரைக்கும் அவருக்கு இடமாற்றம் இல்லை. அதால "என்னை இடமாத்திப்போடுவினமோ?" எண்ட பயமே இல்லாமல் அவை வேலை செய்யலாம். வீட்டுக்கு கிட்ட உள்ள வலயத்தில அவை ஐ.எஸ்.ஏ.யா போனால் அதிர்ஷ்டம், தூர இடத்தில வேலை செய்யோணும் எண்டால் துரதிர்டம். வலிகாமம் பகுதியில இருக்கிற சிலர் தீவக வலயத்திலையும், வெளிமாவட்டங்களிலையும் ஐ.எஸ்.ஏ.யா புரமோசன் கிடைச்சுப் போனவை , இனி பென்சன் எடுக்கும் வரைக்கும் அங்கேயே வேலை செய்யவேண்டியதுதான். ஆனால் வீட்டுக்கு கிட்ட உள்ள வலயங்களில ஐ.எஸ்.ஏ.யா உள்ளவை இப்பிடி தூர இடத்துக்குப் போடாமல் வீட்டுக்கு கிட்டவா வேலை கிடைச்சதை நினைச்சு சந்தோசப்படுறதை விட்டிட்டு, பள்ளிக்கூட ரீச்சர்மாரை வதைக்கிறதிலேயே குறியா இருக்கினமாம். "நாங்கள் தான் எப்பவும் உங்கட பாடத்துக்கு ஐ.எஸ்.ஏ.யா இருப்பம். அதால எங்களைப் பகைச்சால் நீங்கள் இந்த வலயத்தில இருக்கும் வரை சிக்கல் தான்" எண்டு வெருட்டிற ஆக்களும் இருக்கினமாம்.

கிட்டடியில ஒரு பள்ளிக்கூட வாத்தியாரை விசாரிக்க அந்தப் பாடத்துக்குப் பொறுப்பான ஐ.எஸ்.ஏ. ஒராள் போயிருக்கிறார். இத்தனைக்கும் அந்த வாத்தியார் பிள்ளையளின்ர நல்லதுக்காகவும், பள்ளிக்கூட நல்லதுக்காவும் தன்ர உழைப்பை மேலதிகமாகக் கொட்டினது சிலருக்குப் பிடிக்காமல் போட்ட பெட்டிசத்தைப் பற்றி விசாரிக்கத்தான் ஐ.எஸ்.ஏ. போனவர். அந்த வாத்தியார் தன்ர துறைக்காக எவ்வளவு அர்ப்பணிப்பா இருக்கிறார் எண்டு, விசாரிக்கப் போன ஐ.எஸ்,ஏ.க்கும் முதலே தெரியும். ரண்டு பேரும் ஒரே துறைதானே. ஆனால், அந்த வாத்தியாரோட முதல் சின்னதா ஒரு 'ராட்டுப்பாடு' இந்த ஐ.எஸ்.ஏ.க்கு இருந்திருக்கு. அதால ஏதோ கொலைக்குற்றம் செய்தவர் மாதிரி அவரை விசாரிச்சுப் போட்டு, "விசாரணைக்கு ஆசிரியரின்ர ஒத்துழைப்பு பத்தாது" எண்டு எழுதிக் குடுத்திட்டாராம். உண்மையா பிரச்சினை இருந்தால் அப்பிடி எழுதியிருந்தால் அதில ஆரும் குறைசொல்ல மாட்டினம். ஆனால், இப்பிடி தன்ர முன்பகையை தீர்க்கிறதுக்காக ஐ.எஸ்.ஏ. எண்ட பதவியை வைச்சு ஆட்டம் போடுறவைக்கு இடமாற்றம் குடுக்கிறமாதிரி ஒரு ஏற்பாடும் வராதோ? எண்டு ரீச்சர்மார் கடவுளிட்ட மண்டாடுகினமாம். எல்லாம் பதவி படுத்திற பாடு கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA

## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS
### FOR DEGREE PROGRAMME IN B.SC. HONOURS IN AGRICULTURE (2022/2023)

Applications will be entertained by the Office of the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Programme to follow B.Sc. Honours in (Agriculture) as internal students for the Academic Year 2022/2023

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age**: Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Applications forms and other details will be available in the website: **https://www.jfn.ac.lk/ and www.agri.jfn.ac.lk.** Downloaded application forms should accompany with the paid bank slip for deposit of a sum of Rs 100/= credited to the **Peoples' Bank Reference No: 010000150001681** of Bursar, University of Jaffna.

**Closing date:** Applications should reach us on or before: 26.08.2024

Duly completed application forms along with payment receipt and relevant documents should be sent through the relevant Heads of Department to Senor Assistant Registrar, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi by registered post and indicate **"Application for Admission of Public Officers for Degree programme B.SC Honours in Agriculture – 2022/2023"** at the top left-hand corner of the envelop.


Applicant may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for written test and an oral examination, if the application channeled through the Head of the Department is not received. Illegible and incomplete applications and applications received after the closing date will be rejected without intimation.

Eligible candidates will be invited to attend for a Written Test and an Oral Examination.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**

(CR/42862) J-1

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**
**06.08.1940**

**மறைவு**
**19.08.2024**

## கனகராசா குணரத்தினம்

Mayoora Gift Centre & Distributers இன் முகாமையாளர் கு.நரேஸ் அவர்களின் அன்புத் தந்தையார் கனகராசா குணரத்தினம் 19.08.2024 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
Mayoora Gift Centre & Distributers
No 14, New Market,
Power House Road, Jaffna.

(CS 1139) V-1

# மரண அறிவித்தல்

## வேலாயுதம் பாலசிங்கம்



**மண்ணில்**
**09.02.1947**

**விண்ணில்**
**19.08.2024**

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் பாலசிங்கம் கடந்த (19.08.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - அன்னமா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னபூரணம் (புனிதம்) அவர்களின் பாசமிகு கணவரும், பாலசபேஸ் (பிரான்ஸ்), பாலசுபேஸ் (இத்தாலி), பாலசுரேஸ் (லண்டன்), பாலசுபிதா (பிரான்ஸ்), பாலசுஜானி (பிரான்ஸ்), பாலகண்ணன், பாலரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரேமலாதேவி (பிரான்ஸ்), தயாமதி (இத்தாலி), பாலகௌரி (லண்டன்), விஜயகுமார் (பிரான்ஸ்), அருள்ராஜ் (பிரான்ஸ்), மோகனா (பிரான்ஸ்), மேனகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, நாகேஸ்வரி மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, கனகசூரியர் மற்றும் தவராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான தங்கவேல், சண்முகம் மற்றும் திருமலர், பாலசுப்பிரமணியம், சிவமூர்த்தி, வேலும்மயிலும், கணேசமூர்த்தி, காளிராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிலான், நிலானா, நிபிசா, சுஜன், சுஜானா, சுரேனா, சுஜீனா, சுவேதா, விதுஷன், வினுஷா, அனுசிகா, ஆகாஷ், கனுஷ்கா, கஜானா, கரிஸ், ரக்ஸ்சா, ரஸ்மி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.42, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 076 297 8905, 021 222 6438

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கிறது பவ்ரல்

## வேட்பாளர் ஜனக முறைப்பாடு

**கொழும்பு, ஓக. 22**

**தேர்தல் கண்காணிப்பு அரச சார்பற்ற நிறுவனமான பவ்ரலுக்கு எதிராக ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருமான ஜனக ரத்நாயக்க தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.**

பவ்ரல் நிறுவனம் ஜனாதிபதி வேட்பாளர்களை நேரடி விவாதத்துக்கு அழைத்தமை தொடர்பாகவே இந்த முறைப்பாட்டை ஜனக ரத்நாயக்க பதிவு செய்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பொதுஜன பெரமுன வேட்பாளர் நாமல் ராஜபக்ச, திலித் ஜெயவீர, தமிழ் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் ஆகியோரையே பவ்ரல் நேரடி விவாதத்துக்கு அழைத்துள்ளது. 39 வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நிலையில் ஆறு பேரை மட்டும் நேரடி விவாதத்துக்கு அழைத்தமை குறிப்பிட்ட ஆறு பேருக்கும் ஆதரவை அதிகரிக்கும் செயற்பாடு என ஜனக ரத்நாயக்க முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-6)

# கவிந்தவுக்கு எதிராக போலிக் காணொலி

## 4 பேர் விளக்கமறியலில்

கொழும்பு, ஓக. 22

நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக போலியான காணொலியொன்றை முகநூலில் பதிவு செய்த குற்றச்சாட்டின் கீழ் 4 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் கவிந்த ஜெயவர்த்தனவின் குடும்பத்தினருக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் புனையப்பட்ட செய்தியை முகநூலில் பதிவு செய்து கவிந்த ஜெயவீரவின் குடும்பத்தினரின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

முதலாவது சந்தேகநபருக்கு சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திலும் கோட்டைப் பொலிஸ் நிலையத்திலும் செல்வாக்கை பிரயோகித்தார் என்றும் மூன்றாவது சந்தேகநபர் ஒரு போலி காணொலியைத் தயாரித்து முதலாவது சந்தேகநபருக்கு வழங்கியுள்ளார். முதலாவது சந்தேகநபர் அந்தக் காணொலியை இரண்டாம். மூன்றாம் சந்தேகநபர்களுடன் பகிர்ந்துள்ளார் என்றும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

விசாரணைகள் முடிவடையும் வரையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-6)

# முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார் ஹரீஸ் எம்.பி.

## ஹக்கீம் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் பதவியில் இருந்தும், உச்சபீட உறுப்புரிமையிலிருந்தும் அந்தக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடைய அறிவுறுத்தலுக்கு அமைவாக அவர் நீக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ள நிலையில், சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நடத்தப்பட்ட எந்தவொரு கூட்டத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அரசாங்கத்திடமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், 860 மில்லியன் ரூபாவை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ரூ.10,000 நிவாரணம்!



## தே.ம. சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 22

குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு மாதாந்தம் 10ஆயிரம் ரூபா வழங்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமாகிய அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டினால் ஊழல் மோசடிகள், மக்களின் பணம் களவாடுதல் நிறுத்தப்படும்.

கிராமிய பொருளாதாரம், சிறு கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் உண்டு.

தமது ஆட்சியில் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களை குறைப்பதுடன் வறியவர்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# நுவானுக்கு ஆதரவாக யாழில் பரப்புரை

யாழ்ப்பாணம், ஓக.22

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகேயை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதன்கிழமை தேர்தல் பரப்புரை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வசந்த முதலிகே, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் மக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களை வழங்கியிருந்தனர். (ச-25, 20)

# எரிசக்தியில் பங்களிப்பு இந்தியாவுடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஓக. 22

இந்தியாவின் பெட்ரோநெட் எல்என்ஜி லிமிடெட் (பிஎல்எல்) மற்றும் இலங்கையின் எல்டிஎல் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஆகிய இரண்டு நிறுவனங்கள், இலங்கைக்கான திரவ இயற்கை எரிவாயு உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் விநியோகத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

திரவ இயற்கை எரிவாயுவை இறக்குதல், சேமிப்பு மற்றும் மறு எரிவாயு வசதிகளை மேம்படுத்துதல் வசதிகளுக்காக. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ச-இ)

# ரூ.300 மில்லியன் இழப்பீடு வேண்டும்

## கண்பார்வை இழந்தோர் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஓக. 22

மருத்துவமனையில் கண்புரை சத்திர சிகிச்சைக்குப் பிறகு பயன்படுத்தப்படும் 'ப்ரெட்னிசோலோன் அசிடேடீன்' கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதால் நிரந்தர பார்வை இழப்புக்கு உள்ளான 3 நோயாளிகள், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தமது கண் பார்வை இழப்பு மற்றும் அதனால் தமது உயிருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளின் பொருட்டு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் 10 பேரிடமிருந்து ரூ. 300 மில்லியன் கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச மருத்துவத்துறையின் அசண்டையீனத்தால் எங்கள் வாழ்க்கைக்கு கூடுதல் சுமை ஏற்பட்டுள்ளது. இது உண்மையில் துரதிர்ஷ்டம். சிகிச்சை பெற நம்பிச்சென்ற எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே, நீதி இழப்பீடு கோருகிறோம் என்று [illegible] குறிப்பிட்டுள்ளனர். [illegible]



# 2025 இல் ஊதிய உயர்வு

## அரச ஊழியர்களுக்கு உறுதி

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

அரச சேவையின் ஆரம்பச் சம்பளம் 24 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் 55 ஆயிரம் ரூபா சம்பள மட்டம் உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டு மக்கள் படும் துன்பம் எங்களுக்குத் தெரியும். நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வர வற்வரியை அதிகரிக்க வேண்டியிருந்தது. நாங்கள் அதை விருப்பத்துடன் செய்யவில்லை.

பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களை நாங்கள் மறக்கவில்லை. 2025 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக ஆக்குவதன் மூலம், வாழ்க்கைச்செலவுக்கொடுப்பனவு25,000 ரூபாவாகவும், அரச சேவையின் ஆரம்பச் சம்பளம் 24% இனால் அதிகரிக்கப்பட்டு, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் 55,000 ரூபா சம்பள மட்டமொன்று உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
### மகோற்சவ கால கடை ஏலம்

துர்க்காதேவி தேவஸ்தான மகோற்சவ காலத்தில் தற்காலிக கடை அமைப்பதற்கான ஏலம் எதிர்வரும் 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெறும். கடைகளினை ஏலத்தில் எடுப்பவர்கள் அன்றையதினமே முழுத் தொகையினையும் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

-இணைச்செயலாளர்கள்-

(CS 55987) V-1



## பெயர் மாற்றம்

A9 வீதி. ஆனையிறவில் வசிக்கும் றெலின்றா கொட்பிறே யோசேப் டீனீஸ் ஆகிய நான் எனது பெயரை றெலின்றா டினிஸ் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் றெலின்றா டினிஸ் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

றெலின்றா டினிஸ்

(CS/55985) J-1




# தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புடன் சுவிற்சர்லாந்து தூதர் நேற்றுச் சந்திப்பு

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவருக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் மணிவண்ணன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம-100)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி சியாமா சகிலன் அவர்களின் அன்புத்தாயார்

### அமரர் பத்மா சூடாமணி



தோற்றம் 13.10.1947 மறைவு 19.08.2024

அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
துயருடன்...

ஆசிரியர் நட்புறவுக்கழகம், யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி


## கிராம ஊர்வலம் இன்று

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுக் கிராம ஊர்வலம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மேற்படி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-66)



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய 6ஆம் நாள் உற்சவத்தில் மூளாயூர் தண்ணுமைவேந்தன் மா.சிதம்பரநாதன் மாணவர்களின் தனி ஆவர்த்தன நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (எ-45)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 . 03 . 1952

மறைவு 15 . 08 . 2022

### அமரர் சோமு சிவஞானம்

(ஓய்வுபெற்ற வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்கள ஊழியர், முன்னாள் மேக்கன்ரைல் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்தீர்கள்
எங்களையும் வாழவைத்தீர்கள் அப்பா!
கண்கவரும் கம்பீரத் தோற்றமும்
கணீரென்ற கனிவான பேச்சுரையும்
அன்பே உருவான வட்ட முகம்தனிலே
இன்பமாய் உதிர்க்கும் உதட்டோர சிரிப்பும்
இன்றும் மறக்க முடியவில்லை
ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும் அப்பா!
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.
மனைவி: [illegible]
பிள்ளைகள்: [illegible]
சுஜானா

வளலாய், சல்லி,
அச்சுவேலி.

(CS/1147) J-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 16 09 1958

மறைவு 21 08 2024

### பிரதாபன் குணேஸ்வரி (குணம்)

(உரிமையாளர்-Kuna Construction and Consultancy Services)

ஐயனார் கோவிலடி. கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரதாபன் குணேஸ்வரி அவர்கள் நேற்று (21.08.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரன் - பரமேஸ்வரி (பூபதி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திருஞானலிங்கம் - அன்னபாக்கியம் (ஈஸ்வரி) தம்பதியரின் பாசமிகு மருமகளும், பிரதாபன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ் மாநகர சபை) அவர்களின் அன்பு மனைவியும், குருபரன் (வருமான பரிசோதகர் - வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்), சூரியப்பிரகாஷ் (பட வரைஞர் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகார சபை iroad-2 Project) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்சிகா (ஆசிரியை - மு/விஸ்வமடு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியாரும், மகிரிஷியின் அன்பு பேர்த்தியும், செல்வகுமார் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி), யோகேஸ்வரி (ஆசிரியை - ஸ்ரீஞானபண்டிதா வித்தியாசாலை), புஸ்பராணி (சுவிஸ்), ஜெயராணி (ஆசிரியை - ஸ்ரீஞானபண்டிதா வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 242 9805

(CS/1187) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிவேல் சுரேஷ், ஸாஹிர் இருவருக்கும் பதவிகள்

நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ் மற்றும் ஸாஹிர் இருவருக்கும் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவால் உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஷ் தொழிலாளர் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அபிவிருத்தித் திட்ட அமைச்சராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இருவரும் அண்மையில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை தெரிவிப்பதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-சி)

## பவ்ரல்...

ஆறு வேட்பாளர்களை முதன்மைப்படுத்தி, நேரடி விவாதங்களை நடத்த பவ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ள நிலையிலேயே, 'குறிப்பிட்ட சிலரிடம் இருந்து பவ்ரல் லஞ்சம் பெற்றதா?' என்று ரொஷான் ரணசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியானதாகவும் இடம்பெறுகிறதா? என்ற கேள்விகள் எழுகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவே முதலில் அநீதியை இழைக்கின்றது. சில வேட்பாளர்களுக்கு அவர்களின் உதவியாளர்களை அழைத்துவர தனியான இடம் ஒதுக்கியுள்ளது. 39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்கையில் 4 வேட்பாளர்களுக்காக மட்டும் தனி இடம் ஒதுக்குவது அவர்களுக்கான ஊக்குவிப்பாகவே அமைகின்றது. இது தேர்தல்கள் சட்டத்துக்குச் சாதகமானதா?

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்காக 20 ரூபாவே செலவிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரால் 109 ரூபா செலவிட முடியுமென அறிவித்துள்ளது. அப்படியென்றால் ஒரு வேட்பாளர் 180 கோடி வரை செலவழிக்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிறிய தொகையல்ல. தேர்தல்கள் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகிறது.

அதேபோன்று சில ஊடகங்களும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்காகவும் செயற்படுகின்றன. 39 பேருக்கும் சம உரிமையை வழங்கவேண்டும். ஆனால் தற்போது ஒருசில ஊடகங்கள் மிகவும் கீழ்த்தரமான முறையில் தங்களுக்கு இணக்கமான வேட்பாளரை மாத்திரம் ஊக்குவிக்கின்றன.

நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கும் பவ்ரல் நிறுவனமும் தற்போது அநீதியான முறையில் நடந்து கொள்கிறது. பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான விவாதத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 6 வேட்பாளர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் பவ்ரல் அமைப்பு ஒரு தரப்பிடமிருந்து கப்பம் பெற்று விட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது.

இது நீதியான தேர்தலா? செலவு கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தின் எதிர்பார்ப்பு என்ன? கறுப்புப் பணம், போதைப்பொருள் பணம், பாதாள குழுக்களின் பணம், சூதாட்டப் பணம் என்பன இந்த தேர்தலில் புழக்கத்தில் உள்ளன. இப்படியே போனால் எதிர்காலத்தில் நாடு அழிவையே எதிர்நோக்கும்" - என்றார். (அ-ம)

## மருத்துவ...

சிசுவின் தந்தை தெரிவித்ததாவது:-

"வவுனியா, செட்டிகுளம், பிரமணாலங்குளம் பகுதியில் வசிக்கும் நான், எனது மனைவியை பிரசவத்துக்காக கடந்த 17ஆம் திகதி வவுனியா மருத்துவமனையின் 7 ஆம் விடுதியில் அனுமதித்திருந்தேன். மறுநாள் அவருக்கான மருந்துகள் வழங்கப்பட்ட நிலையில் அவரது பன்னீர்க்குடம் உடைந்துள்ளது. இதனை தாங்கமுடியாத எனது மனைவி அங்குள்ள தாதி ஒருவருக்கு விடயத்தினை தெரிவித்திருந்தார். கடமையில் இருந்த மருத்துவருக்கு விடயம் தெரியப்படுத்தப்பட்டபோது, அந்த மருத்துவர் தொலைபேசியைப் பயன்படுத்திக்கொண்டு, எந்தப் பிரச்சினையுமில்லை என்று தெரிவித்துள்ளார். பின்னர் வலிக்குரிய மருந்தினை மனைவிக்கு கொடுத்துவிட்டு உறங்குமாறு தெரிவித்துள்ளனர். மறுநாள் மருத்துவமனைக்கு வந்த மருத்துவ அதிகாரி ஒருவர், அறுவைச் சிகிச்சை செய்து குழந்தையை எடுத்திருக்கலாம்தானே என்று, முதல்நாள் கடமையில் இருந்த மருத்துவரைக் கடிந்துகொண்டார். அன்று மாலை 5 மணியளவில் மனைவியை சிகிச்சைக் கூடத்துக்கு அழைத்துச் சென்றனர். பலமணி நேரமாகியும் அவர் வெளியில் வரவில்லை. இதற்குள் 7ஆம் விடுதியில் குளிரூட்டி இயங்கவில்லை எனத் தெரிவித்து 5 ஆம் விடுதிக்கு எனது மனைவியை மாற்றியுள்ளனர். பின்னர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் எனது குழந்தையை அனுமதித்தனர். அதைத் தொடர்ந்து, நேற்று இரவு (நேற்றுமுன்தினம்) குழந்தை இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். எனவே, மருத்துவர்களின் அசமந்தப் போக்கால் எனது மனைவிக்கு நடந்த கொடுமைக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். எனக்கு நீதி கிடைக்காமல் நான் சிசுவின் சடலத்தைப் பொறுப்பெடுக்கமாட்டேன்" - என்றார்.

இது தொடர்பாக வவுனியா மருத்துவமனையின் பணிப்பாளர் சுகுணனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, உள்ளக விசாரணை இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-ம-18-110)

## கிளி...

கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனையில் காணப்படும் அவசரத் தேவைகள் தொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவகலாநிதி வி.பி.எஸ்.டி.பத்திரன, வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் எடுத்துக் கூறியதற்கு அமைய மத்திய சுகாதார அமைச்சுக்கு வடக்கு ஆளுநரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைக்கு அமையவே இவ்வாறு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைக்கான 500 கிலோவாட்ஸ் வலுவுடைய மின்பிறப்பாக்கி உட்பட பல்வேறு அடிப்படைத் தேவைகள் இந்த நிதியின் மூலம் நிவர்த்திக்கப்படவுள்ளன. (அ-ம-66)

## காணி...

சிறுப்பிட்டியில் அமைந்துள்ள காணிக்கு போலியான ஆவணங்களைத் தயாரித்து மோசடி செய்ய முனைந்தார் என்ற குற்றச்சாட்டில் 39 வயதுடைய ஆணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மேற்படி சந்தேகநபரைக் கைதுசெய்து, மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினார்கள். இதையடுத்து அந்த ஆண் எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## 24 ஆம்...

நிலை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். குளிரான வானிலை நிலவும் அதேவேளை மிதமான வேகத்துடன் கூடிய காற்றும் வீசுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-66-555-20)

## யாழில்...

அத்துடன் புலோலியிலும் கடும் காற்றால் கணிசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரால் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புலோலி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் மீது பனைமரம் முறிந்து விழுந்ததால் அந்த ஆலயமும் முற்றாகச் சேதமடைந்துள்ளது. (அ-ம-66-26-20)

## ஐ.நா.வை...

ஜனாதிபதி செயலகத்தில் இன்று இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலை வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. அரச அதிகாரிகள், இராஜதந்திரிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைஅரசாங்கம் இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, தன்னுடைய பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக 2022ஆம் ஆண்டில் இரண்டு வருடகால அவகாசத்தை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியிருந்தது. இந்த அவகாசம் இந்த மாதத்துடன் முடிவடைகின்றது. இதனால், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மீது பல்வேறுபட்ட நெருக்குவாரங்கள் ஐ.நா.வால் பிரயோகிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வது தொடர்பில், இலங்கை அரசாங்கம் இன்று சிறப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளது.

காணாமற்போனோர் விவகாரங்களில் விசாரணை நடத்துவதற்காக, இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள 'ஓ.எம்.பி.' அலுவலகம் கண்துடைப்பு நாடகம் என தமிழர் தரப்பு, தொடர்ச்சியாக விமர்சித்துவரும் பின்னணியில், அந்த அலுவலகத்தால் அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கில் பிரதேச செயலக ரீதியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## குழந்தையின்...

குழந்தையின் தாய் வலிதாங்க முடியாமல் பல மணிநேரம் கதறிக்கொண்டிருந்தார். அப்போதும்கூட அவருக்கு உரிய மருத்துவக் கவனிப்பு வழங்கப்படவில்லை. இவர்களை நம்பி எவ்வாறு மருத்துவமனைகளுக்குச் செல்லமுடியும்? இந்தச் சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணை இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ளனர். எனினும், மருத்துவமனையின் உள்ளக விசாரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே சுகாதார அமைச்சினூடாக ஒரு குழு நியமிக்கப்பட்டு இதற்கு நீதியான விசாரணையை மேற்கொள்ளவேண்டும் - என்றனர்.

நேற்று மாலை சிசுவின் சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான், உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். (அ-ம-110)

## 'விக்கெட்'...

பயணம் தொடரும். ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்தியமை தொடர்பில் எனக்கு இன்றளவிலும் கவலை உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்புரிமை கிடைக்கப் பெற்றிருந்தாலும் அந்தக் குற்றம் மனதை வதைத்துக் கொண்டிருக்கின்றது.

எமது கட்சித் தலைவராக இருந்தவர் தற்போதைய ஜனாதிபதி. அவருக்கும் எமக்கும் இடையில் கொள்கை முரண்பாடுகள் இல்லை. எனவே, அவர் விடுக்கும் அழைப்பை ஏன் நிராகரிக்க வேண்டும்? எமது கட்சித் தலைவர்கள் இரு அணிகளாகப் பிரிந்து போட்டியிடும் முடிவு தவறு' - என்று சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே அத்துகோரள இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும், விரைவில் ரணிலுடன் இணைவார் என்றும் அறியமுடிகின்றது. (அ-ம-44)

## கரவெட்டியில்...

பிள்ளைகளும் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.22

அமரர் சைவப்புலவர் சு.செல்லத்துரையின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியம் நடத்தும் கலைப்போட்டிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளும், அகில இலங்கைரீதியான கலைப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் தனிப்போட்டியில் பஞ்சபுராணம் ஓதல், அபிநய நடனம், பேச்சு, வினாடிவினா, கதாப்பிரசங்கம் என்பனவும், குழுப்போட்டியில் புராணபடனம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், நாடகம் என்பனவும் நடத்தப்படவுள்ளன.

அகில இலங்கை ரீதியில் நாடக, வில்லிசை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்பிரிவுகளில் குழு நிலையில் எந்த அமைப்பினரும் பங்குபற்றமுடியும் எனவும், வயதெல்லை இல்லை எனவும், அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை ஆகும்.

போட்டி தொடர்பான மேலதிக விவரங்களை 0771974332 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறக்கட்டளை நிதியத் தலைவர் த.தயானந்தன் தெரிவித்தார். (ச-45)

# நிர்வாக முறைமை மாற்றம் வேண்டும்

### பேராதனை முகாமைத்துவ பீடாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 22**

**இலங்கையில் ஒரு நிர்வாக முறைமை மாற்றம் ஏற்பட வேண்டுமென பேராதனை பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி கலாநிதி திலக் சுபசிங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் ஒரு நிர்வாக முறைமை மாற்றம் ஏற்படவேண்டுமென தனிப்பட்ட ரீதியில் பரப்புரையை முன்னெடுத்து வரும் திலக் சுபசிங்க கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டு இங்குள்ள புத்திஜீவிகளுடன் கலந்துரையாடலை நடத்தியிருந்ததுடன் உதயனுடனும் தனது கருத்துகளை பகிர்ந்து கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் புத்திஜீவிகள் இணைந்து ஒரு உறவுப்பாலத்தை உருவாக்கவேண்டும். இரு பகுதியினரும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டு விட்டோம். தமிழ்-சிங்கள மக்களிடையே காணப்படும் இடைவெளியை நீக்கவேண்டியது கல்வியியலாளர்களாகிய எமது கடமை. அரசியல்வாதிகள் வறுமையைத் தக்க வைக்கவே விரும்புகின்றனர். துரதிர்ஷ்ட வசமாக எமது நாட்டில் கல்வியியலாளர்கள் அரசியல்வாதிகளின் பின்னால் செல்கின்றனர். கல்வியியலாளர்களிடமிருந்து சுயநலச் சிந்தனை அகற்றப்படவேண்டும். கல்வியியலாளர்கள் நாட்டைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இப்போது மருத்துவத்துறையை சீரழிக்க முற்படுகின்றனர். புதிய மருத்துவச் சட்டங்களின் கீழ் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சந்திக்குச்சந்தி தேநீர் கடைகள் இருப்பது போல் தனியார் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்படும். நாடு பிளவுபட்டிருப்பதற்கு சந்தேகமே அடிப்படைக் காரணம். இரு பகுதியினருக்கும் இடையிலான சந்தேகம் நிவர்த்தி செய்யப்படவேண்டும்-என்றார். கலந்துரையாடலின் இறுதியில் சிங்களப் புத்திஜீவிகளுக்கே கசக்கும் விடயமான சமஷ்டி அடிப்படையிலான தீர்வு பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன என்று கேட்டதற்கு,சமஷ்டி முறையில் அதிகாரப்பகிர்வை மேற்கொள்வதில் எதுவித பிரச்சினையுமில்லை. அதிகாரப்பகிர்வு அவசியம்ஒரு பிரதேசத்தின் வளங்கள், காலநிலை, இயற்கைச்சூழல், வாழ்க்கைமுறை என்பன அந்தப்பிரதேச மக்களுக்கே தெரியும். எனவே சம்பந்தப்பட்ட மக்களிடமே அதிகாரத்தை ஒப்படைத்தால் அவர்கள் தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வார்கள்- என்றார். (ஓ-ஙு)

## விளையாட்டு விழா

சுந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலைய முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நிலையத் தலைவர் இ.சுத்தானந்தன் தலைமையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான், சிறப்பு விருந்தினர்களாக யாழ். தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் ஓய்வுபெற்ற உதவிப் பிராந்திய முகாமையாளர் செ.ஜெயநாதன், யாழ். போதனா மருத்துவமனையின் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் பு.ஹரிகரேந்திரா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25,66)

✦✦✦✦

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் மற்றும் சண்டிலிப்பாய் வடக்கு நற்பணி மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த சண்டிலிப்பாய் வடக்குச் சிவசக்தி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை முதல்வர் க.ஆதவன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25-63)

## 'கலாநேத்ரா' விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்!

வவுனியா, ஓக.22

வவுனியா பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து வழங்கும் 'கலாநேத்ரா' 2024 விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அந்தவகையில் விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலக பிரிவினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதுடன், 25 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும். ஏற்கனவே பிரதேச விருது பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நிகழ்வில் சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடக எழுத்துரு, இசை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை, மெல்லிசை), மரபுக்கலை (நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு) நாடக ஆற்றுகை, சிற்பம், ஓவியம், பரதம், வாத்திய இசை, வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கடம், முகர்சிங், ஓர்கன் போன்றன), குறும்படம், இயல் (பேச்சு, விவாதம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம்), அறிவிப்பு, மரபு இசை (தவில், நாதஸ்வரம், பறை, உடுக்கு), ஊடகம் ஆகிய 17 துறைகளுக்கு குறித்த விருதுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-ரி-110)

### ஹவுத்தி மீதான தாக்குதல்

# மன்னருக்குத் தெரியாமல் போர் தொடுத்தது சவூதி!

### முன்னாள் உளவுத்துறை அதிகாரி குற்றச்சாட்டு

சனா, ஓக. 22

ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை ஆரம்பிப்பதற்காக, தனது தந்தையின் கையொப்பத்தை சவூதியின் பட்டத்து இளவரசர் சல்மான் மோசடியாக வைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு, ஹவுத்தி கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக சவூதி போர்ப் பிரகடனம் செய்தது. ஆனால், அந்தப் பிரகடனத்துக்கான அரச ஆணையில், சவூதியின் மன்னர் கையொப்பம் இடவில்லை. மன்னரின் கையொப்பத்தை, மன்னருக்குத் தெரியாமல் சவூதியின் பட்டத்து இளவரசர் சல்மான் வைத்துக்கொண்டார் என்று சவூதியின் முன்னாள் மேஜர் ஜெனரலும் உளவுத்துறை அதிகாரியுமான அல் ஜப்ரி தெரிவித்துள்ளார்.

வயது மூப்புக் காரணமாக மன்னரின் மூளைத்திறன் பாதிக்கப்பட்டுள்ளது. அவர் நினைவாற்றல் இழப்பால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார். இதை பட்டத்து இளவரசர் பின் சல்மான் பல்வேறு கட்டங்களில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளார். போர் அறிவிப்புக்கள், வெளிவிவகாரக் கொள்கைகள் என பல விடயங்களில் சவூதி அரசருக்குத் தெரியாமல் பல்வேறு முடிவுகளை சல்மான் எடுத்துள்ளார் என்றும் அல் ஜப்ரி தெரிவித்துள்ளார்.

எனது இரண்டு குழந்தைகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்க அனைத்து முயற்சியையும் செய்கிறேன். எனவே எனது குழந்தைகள் மற்றும் எனது நாட்டின் நலனுக்காக பேசுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. என்னைக் கொல்ல இளவரசர் விரும்புகிறார். என் கொலைக்கு அவர் திட்டமிட்டுள்ளார். நான் இறந்து கிடக்கும் வரை அவர் ஓயமாட்டார். அதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்றும் சவூதியின் முன்னாள் உளவுத்துறை அதிகாரி அல் ஜப்ரி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 22

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் நல்லூரிலுள்ள சிவகுரு ஆதீன வளாகத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக அருளுரையில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் 'அத்வைதம்' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார். (ச-66,100)

### வேலைக்கு ஆள் தேவை

கட்டட நிறுவனமொன்றுக்கு வேலைக்கு கூலி ஆட்கள் தேவை

**தொடர்புகளுக்கு:**

**076 760 0403**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.